கொழும்பு மாகாணத்தின், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

(மாகாண வீதி, போக்குவரத்து,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக,
வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்,
கைத்தொழில் மற்றும்
கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு – மேல் மாகாணம்)

பதவி வெற்றிடம்

வீதி மற்றும் வீதி சார்ந்த நிர்மாணங்களை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பதன் மூலம் பொதுமக்களின் போக்குவரத்துக் காலத்தைக் குறைத்து வசதியான மற்றும் பாதுகாப்பான வீதி கட்டமைப்பு ஒன்றை உரித்தாக்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாகாணங்களுக்கு இடையே வளப் பகிர்வு முரண்பாட்டை மட்டுப்படுத்தும் நோக்கில் இந்த அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் கீழுள்ள பதவி வெற்றிடத்திற்காக செயல்திறன் உள்ள மற்றும் சுய ஊக்கம் கொண்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொறியியலாளர் (பொருட்கள்) - பதவி - 01

தகைமை

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, பொருள் பொறியியல் (Material Science)/ சிவில் பொறியியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

2017 இன் 04 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் சபை சார்ந்த பொறியியலாளர் ஒருவராக பதிவு செய்திருத்தல் மற்றும் அவ்வாறு பதிவு செய்த பின் பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு அனுபவம் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.
2. "கனிஷ்ட முகாமைத்துவ" (JM-1-1) சேவைத் தரத்திற்கு தொடர்புடைய துறையின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

2017 இன் 04 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் சபையின் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவராக பதிவு செய்திருத்தல்.

சம்பளம்: முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட சம்பளக் கட்டமைப்பு

MM 1-3 - ரூபா 96,650 – 10 x 2,480 – 15 x 3,450 – 173,200

மேலுள்ள சம்பள கட்டமைப்புக்கு அமைய சம்பளம் வழங்கல் 2027.01.02 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்.

(2026 ஜனவரி மாதம் தொடக்கம் ரூபா 85,896/=)

வயது: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்: 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உச்ச வயது வரம்பு பொருந்தாது.

- **பொது நிபந்தனை:-**

மேல் மாகாணத்திற்குள் மூன்று (03) ஆண்டுகள் நிரந்த வதிவாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

- **நியமன பண்பு:** நிரந்தரமானது, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பெறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாகும்.
- **மேலதிக நன்மைகள்:-**

  அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு

  அரசு அங்கீகரித்த ஏனைய கொடுப்பனவுகள்

  அரசு அங்கீகரித்த கடன் வசதிகள்

விண்ணப்பித்தல்:

01. சுயவிபரக் கோவையுடன் உறவினர் அல்லாத, தம்மைப் பற்றி பரிந்துரைக்க முடியுமான இருவரின் பெயர், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள், கல்வி/ தொழில் தகைமையை உறுதி செய்வதற்கான சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் தமது துறைத் தலைவரின் பரிந்துரையுடனும், அதேபோன்று ஏற்கனவே அரச/ கூட்டுத்தாபன/ சட்டரீதியான சபையின் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை, தமது நிறுவன தலைவர் ஊடாகவும் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில், குறித்த பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.
03. அனைத்து விண்ணப்பங்களும் 2026.11.23 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் சமர்ப்பித்தல் வேண்டும். 2026.11.23 ஆம் திகதியின் பின் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
மேல் மாகாணத்தின், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
இலக்கம்: 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு 12
தொலைபேசி: 011 2321996, 0714526202